www.Padasalai.Net www.TrbTnpsc.com

### படைப்பாற்றல் கற்றல் நிலைகள் பாடவாரியான ஒப்பீட்டு படிவம்

| Sl.No. | Duration in minutes | Languages | Maths | Science & Social Science |
|---|---|---|---|---|
| 1 | 10 mts | Introduction | Introduction | Introduction |
| 2 | 10 mts | Guided Reading | Survey | Reading |
| 3 | 15 mts | Mind map | Understanding | Mind map |
| 4 | 10 mts | Consolidation & Presentation | Group work | Consolidation & Presentation |
| 5 | 15 mts | Reinforcement | Reinforcement | Reinforcement |
| 6 | 15 mts | Evaluation | Evaluation | Evaluation |
| 7 | 15 mts | Remedial | Remedial | Remedial |
| 8 | - | Writing | Writing | Writing |
| 9 | - | Follow up | Follow up | Follow up |

www.Padasalai.Net

### படைப்பாற்றல் கற்றல் படிநிலைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Stage I (45 நிமிடம்) | 1. | அறிமுகம் | 10 நிமிடம் | : | |
| | 2. | படித்தல் | 10 நிமிடம் | : | |
| | 3. | மனவரைபடம் | 15 நிமிடம் | : | |
| | 4. | தொகுத்தல் | 10 நிமிடம் | : | |
| Stage II (45 நிமிடம்) | 5. | வலுவூட்டல் | 15 நிமிடம் | : | |
| | 6. | மதிப்பீடு | 15 நிமிடம் | : | |
| | 7. | குறைதீர்கற்றல் | 15 நிமிடம் | : | |
| | 8. | எழுதுதல் | Home work | : | |
| | 9. | தொடர்பணி | | : | |

www.tnmanavan.blogspot.com

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

**தமிழ் - படைப்பாற்றல் கற்றல்**

1. **அறிமுகம்** (10 நிமிடம்)
   - ☞ சிறுபாடல்கள் பாடுதல் அல்லது கதைகள் கூறுதல்

2. **படித்தல்** - ஆசிரியர் வழிக்காட்டுதலுடன் மாணவர் படித்தல் - (10 நிமிடம்)
   - ☞ பாடப்பகுதியை முதலில் ஆசிரியர் படித்தல்
   - ☞ பின்பு ஆசிரியர் வழிக்காட்டுதலுடன் மாணவர் படித்தல்
   - ☞ செய்யுளைப் படிக்கும் போது சொற்களைப் பிரித்து படிக்கும் முறையினைக் கூறுதல்.
   - ☞ உரைநடையில் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப படிக்கும் முறையினைப் பழகுதல்.
   - ☞ உரையாடல், கதைகள் பாடங்களாக அமையின் குரல் ஏற்ற இறக்கம், உணர்ச்சி வெளிப்படுத்துமாறு படித்தல்.

3. **மனவரைபடம்** (15 நிமிடம்)
   - ☞ மனவரைபடத்தினை மாணவர்கள் வரைதல். ( 5 நிமிடம்)
   - ☞ பாடக்கருத்துக்களின் அடிப்படையில் மாணவர்கள் தயாரித்த மனவரைபடத்தை வழங்குதல். (5 நிமிடம்) (ஒரு குழு மாணவர்கள் மட்டும் ஒரு வகுப்பில் மனவரைபடத்தை விளக்குதல் போதுமானது. மற்ற மாணவர்களுக்கு அடுத்த வகுப்புகளில் சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கலாம்.
   - ☞ விடுபட்ட கருத்துக்களுடன் ஆசிரியர் மன வரைபடத்தை வழங்குதல். (5 நிமிடம்)

www.Padasalai.Net

4. **தொகுத்தல்** (10 நிமிடம்)

முன்னர் குறிப்பிட்டுள்ள 7 முறைகளில் தொகுத்தலை செய்ய வேண்டும்.

- ☞ தொகுத்தலை ஏதேனும் ஒரு முறையில் மற்றொரு மாணவர் குழு வழங்குதல்.
- ☞ விடுபட்ட கருத்துகளுடன் ஆசிரியர் தொகுத்தளித்தல்.

பாடத்திற்கு கருத்திற்கு ஏற்ற விதத்தில், ஏதேனும் முறைகளில் தொகுத்தல் யுத்திகளை பயன்படுத்தி தொகுத்தளித்தல்.

5. **வலுவூட்டல்** (15 நிமிடம்)
   - ☞ மொழித்திறன் வெளிப்படும் வகையில் செயல்பாடுகள் அமைதல்

6. **மதிப்பீடு** (15 நிமிடம்)
   - ☞ எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளை ஆசிரியர் நடத்தி மதிப்பீடு செய்தல்.
   - ☞ ஆசிரியர், மாணவர் அடைவு நிலை / கற்றல் நிலையினைக் கருத்தில் கொண்டு CCE மதிப்பீட்டு முறைகளில் மதிப்பீடு செய்யலாம்.

எழுத்துத் தேர்வு மட்டுமன்றி வாய்மொழித் தேர்வுகளும் அவ்வப்போது ஆசிரியரால் நடத்தப்பட்டு மாணவர்கள் மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படலாம். பாடம் நடத்தி முடிந்தபின் வைக்கப்பட்டு FA(b)யாக பதிவு செய்துகொள்ளலாம். (ஆசிரியரின் விருப்பத்திற்கேற்ப)

**7. குறைதீர் கற்றல்** (15 நிமிடம்)

- மதிப்பீட்டின்போது கண்டறிந்த மாணவர்கள் நிலைக்கேற்ப ஆசிரியர் மீண்டும் சில எளிய உத்திகள் / செயல்பாடுகளைப் பயன்படுத்தி பாடப்பகுதியில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.
- மதிப்பீட்டின்போது கண்டறிந்த மாணவர்களின் நிலைக்கேற்ப ஆசிரியர் மீண்டும் பாடப்பகுதியை விளக்கி தனிகவனம் செலுத்த வேண்டும்.

**8. எழுதுதுல்**

- நூலக புத்தகங்களைப் பயன்படுத்தியும் பாடத்தகவல்களைச் சேகரித்தும் பாடம் சார்ந்த எளிய ஒப்படைப்புகள் வீட்டில் / பள்ளி வேளையில் எழுதச் செய்தல்.
- பாடப்புத்தகத்திலுள்ள வினாக்களுக்கான பதிலையும் வீட்டுப்பாடமாக எழுதலாம்.

**9. தொடர்பணி**

- மொழிப்பாடத்தின் உயர்நிலைத் திறன்களான கவிதை, கட்டுரை, கடிதம், உரைநடையை உரையாடலாக்குதல், உரையாடலைச் செய்தியாக்குதல் போன்ற தொடர்பணியினை வழங்குதல்.

www.Padasalai.Net

## ALM - English

1. **Introduction - 10 mints (Poetry – 10 mints)**
   a) Motivation
   b) Gist of the lesson
2. **Guided Reading - 35 mints (Poetry – 20 mints)**
   **a.** Model reading
   **b.** Reading
   **c.** Silent Reading
   **d.** Explanation of the lesson
3. **Mind Map - 15 Mints (Poetry – 20 mints)**
4. **Consolidation - 15 Mints**
   **Presentation**
   a. Fish bone
   b. Tabulation
   c. word web
   d. Hints
5. **Discussion by the students - 15 Mints (Poetry – 15 mints)**

**6. Enrichment Activities - 45 mints**
   a. Review / Revision
   b. Presentation and comparison
**7. Assessment – 10 mints (Poetry – 10 mints)**
**8. Writing – 10 mints (Poetry – 5 mints)**
**9. Remedial Measures – 5 mints (Poetry – 5 mints)**

**Grammar**

1. Introduction - 10 mints
2. Understanding - 20 mints
3. Guided Mind ma - 15 mints
4. consolidation
5. Enrichment Activity- 20 mints
   a. Presentation & discussion
   b. Revision
   c. Activity (Book exercise)
6. Assessment -10 mints
7. Writing -10 mints
8. Remedial Measure -5 mints

| | | |
|---|---|---|
| Prose | 45 mints | 4 periods |
| Poetry | 45 mints | 2 periods |
| Grammar | 45 mints | 2 periods |

www.Padasalai.Net

9. **Follow up work:** Assign 1 or 2 simple projects related to concepts in the lesson. It will be carried out either in small group (5 members) large group (6 members) with the guidance of Teacher.

**படைப்பாற்றல் கற்றல் – கணிதம்**
**படி நிலைகள் – 90 mts**
**(ஒரே பாடவேளையாக)**

1. அறிமுகம்
   - ஆர்வமூட்டல்
   - நினைவு கூறல்
2. மேலாய்வு
3. புரிதல்
   - கருத்துச் செயல்பாடு
   - ஆசிரியர் செய்யும் எளிய கணக்குகள்
   - மாணவர் தனித்து செய்யும் கணக்குகள்
   - ஆசிரியர் முயன்று செய்யும் மாதிரி கணக்கினை செய்துகாட்டுதல்

4. குழு வேலை : முயன்று செய்யும் கணக்குகள் மற்றும் சிந்தனைத்தூண்டும் செயல்பாடுகள்
    - சிறு குழுவில் மாணவர்கள் ஆசிரியர் உதவியுடன் கணக்குகளை செய்து காட்டி வழங்குதல்
    - சிந்தனைத்தூண்டும் செயல்பாடுகளைத் தயாரித்து மாணவர்களிடம் கலந்துரையாடி குழுவில் வழங்குதல்.
    - சிறுகுழுவில் கலந்துரையாடி தீர்வு கண்டு பெரிய குழுவில் வழங்குதல்.
5. வலுவூட்டல்
6. மதிப்பீடு
7. குறைத்தீர் கற்பித்தல்
8. எழுதுதல்
9. தொடர்பணி

**கணிதம்**

**1. அறிமுகம்:**

மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் முந்தைய பாடக்கருத்துடன் தொடர்புபடுத்தி, சுருக்கமாகப் பாடத்தினை ஆசிரியர் அறிமுகப்படுத்துதல்.

**ஆர்வமூட்டல்**

ஆர்வமூட்டல் செயல் மாணவர்களின் சிந்தனையை தூண்டும் விதமாகவும், கற்றல் செய்யலில் தானே ஈடுபட்டு ஆர்வத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

www.Padasalai.Net

**நினைவு கூர்தல்**

பாடப் பொருளோடு தொடர்புடைய முந்தைய பாடப்பகுதியிலிருந்து கற்ற கருத்துக்களை நினைவு கூறல்.

**2. மேலாய்வு**

ஆசிரியர் இப்பாடவேளைக்குரிய பாடத்தின் ஆரம்பம் மற்றும் முடிவு பக்க எண்களைக் கூறுதல். மாணவர்கள் ஆசிரியர் குறிப்பிட்ட பக்கத்திலுள்ள சூத்திரங்கள், வரையாறைகள், தலைப்புகள், உபதலைப்புகள், வரைபடங்கள், அட்டவணைகள், குறிப்பு போன்றவற்றை வாசித்தல்.

**3. புரிதல்**

**கருத்துச் செயல்பாடு**

கருத்துச் செயல்பாடு என்பது TLM model Static model paper folding, paper cutting, கதைகள், உண்மைச் சம்பவங்கள், படங்கள், வரைப்பட, வாழ்க்கையில் உபயோகிக்கும் பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்தி கருத்தை தெளிவுப்படுத்துவதாக அமைய வேண்டும். இது ஓர் ஆசிரியர் செயல்பாடு ஆகும்.

**ஆசிரியரின் செய்யும் எளிய கணக்கு**

ஆசிரியர் கருத்துத்திறனில் புரிதல் ஏற்படும் வகையில் பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு கணக்கினை விளக்கி தீர்வு கண்டு வழங்குதல்.

**மாணவர்கள் தனித்து செய்யும் கணக்கு**

ஆசிரியர் செய்த கணக்கினை ஒத்த பிற பயிற்சியில் உள்ள கணக்குகளை மாணவர்கள் தனித்து தீர்வு காணுதல் வேண்டும். (குறைந்தது இரண்டு கணக்குகளை மாணவர்கள் செய்தல் வேண்டும்)

**ஆசிரியர் செய்யும் கடின(முயன்று செய்யும்) கணக்கு**

நேரடியாக சூத்திரத்தைப் பயன்படுத்தாமல் பல கருத்துக்களை பயன்படுத்தி தீர்வு காணும் கணக்கு ஒன்றினை மாணவர்களிடம் உரையாடி ஆசிரியர் செய்து காட்டி வழங்குதல் வேண்டும்.

**4.குழுச் செயல்பாடு :** முயன்று செய்யும் கணக்குகள் மற்றும் சிந்தனைத் தூண்டும் செயல்பாடுகள்

முயன்று செய்யும் கணக்குகள்

1. சிறுகுழுவில், ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் முயன்று செய்யும் கணக்குகள் தீர்வு காணுதல்
2. ஒவ்வொரு குழுவாக கரும்பலகையில் வழங்குதல் வே ண்டும்.

**சிந்தனைச் செய்யும் செயல்பாடு**

1. ஆசிரியர்கள் தயாரித்த கணக்குகளை இந்த செயல்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.
2. தெரிவு செய்யப்படும் கணக்குகள் சுய விடை வினாக்கள் (Open ended question) அமைதல் வேண்டும்
3. இச்செயல்பாட்டினை ஒவ்வொரு கருத்திற்கு மேற்கொண்டால் போதுமானது.

**5.வலுவூட்டல்**

www.Padasalai.Net

1. செயல்பாடுகள் மூலம் பாடப்பொருளை பொருள்படும் வகையில் அறியச் செய்தல்.
2. பாடக்கருத்துகளை வாழ்வியல் சூழலில் தொடர்புபடுத்தி எளிய செயல்பாடுகள் மூலம் ஆசிரியர் விளக்குதல்.

பாடக்கருத்தினை வலுவூட்டும் விதமாக ஆசிரியர் மணக்கணக்கினை உருவாக்கி கேட்டல் மற்றும் மாணவர்களையும் கேள்விகளை உருவாக்கச் செய்தல் வேண்டும்.

**6. மதிப்பீடு**

மாணவர்களின் கற்றல் அடைவினை உறுதி செய்வதற்காக ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்.

1. எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளை ஆசிரியர் நடத்தி மதிப்பீடு செய்தல்.
2. ஆசிரியர், மாணவர் அடைவு நிலை / கற்றல் நிலையினைக் கருத்தில் கொண்டு CCE மதிப்பீட்டு முறைகளில் மதிப்பீடு செய்யலாம்.

**செயல்பாடுகள்**

- வினாக்களை எழுப்புதல்
- சிறிய எழுத்து தேர்வு
- புதிர் வினா விடை
- குழு செயல்பாடு போன்றவை

**7. குறைத்தீர் கற்பித்தல்**

1. குழு செயல்களில் கணக்குகளுக்கு தீர்வு காண முடியாத மாணவர்களை தன் மேற்பார்வையின் போது கண்டறிய வேண்டும். அந்த மாணவர்களை மீண்டும் தனித்துவம் செலுத்தி செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
2. மேலும், மதிப்பீட்டின்போது கண்டறிந்த மாணவர்கள் அடைவு நிலைக்கேற்ப ஆசிரியர் மீண்டும் சில எளிய உத்திகள் / செயல்பாடுகளைப் பயன்படுத்தி பாடப்பகுதியில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

**8. எழுதுதல்**

நூலக புத்தகங்களை பயன்படுத்தியும் பாடத் தகவல்களை சேகரித்தும், பாடம் சார்ந்த எளிய ஒப்படைப்புகள் பள்ளி வேளை அல்லது வீட்டில் எழுதச் செய்தல் வேண்டும்.

**9. தொடர்பணி**

பாடக்கருத்துக்களுக்குப் பொருத்தமான ஒரு பருவத்திற்கு 1 அல்லது 2 செயல் திட்டங்களைக் கொடுக்க வேண்டும். ஆசிரியர் வழிகாட்டுதலும் தனியாகவோ சிறிய (அ) பெரிய குழுவிலோ செயல்படுத்தலாம்.

பாடக்கருத்தினை மையமாகக் கொண்டு வாழ்க்கை கணக்குகளை மற்றும் பயிற்சி கணக்குகளை தொடர்பணியாக வழங்குதல் வேண்டும்.

**குறிப்பு**

பகுதி – Bயில் நினைவு கூறுதல் மேற்கொள்ளும் போது பகுதி A யில் கற்ற பாடக்கருத்துக்களை நினைவுட்டுவதாக அமைதல் வேண்டும்.

www.Padasalai.Net

**படைப்பாற்றல் கற்றல்**

**அறிவியல் / சமூக அறிவியல்**

**1. அறிமுகம் – 10 நிமிடங்கள்**

மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் முந்தைய பாடக்கருத்துடன் தொடர்புபடுத்தி, சுருக்கமாகப் பாடத்தினை ஆசிரியர் அறிமுகப்படுத்துதல்.

ஆசிரியர் பாடப்பொருளை அறிமுகப்படுத்துவதற்கு பின்வரும் ஆர்வமூட்டும் செயல்பாடுகளில் பாடப்பொருளுக்கு பொருத்தமானதை செய்து அறிமுகப்படுத்தலாம்.

- செயல்பாடுகள்
- பாடல்
- கதை
- PPT
- CD
- கேள்வி கேட்டல் (Testing Previous knowledge)
- அன்றாட நிகழ்வுகள்

ஒவ்வொரு அலகிற்கு உரிய பாடப்பொருளின் சுருக்கத்தை அனைத்து மாணவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் ஆசிரியரால் வழங்கப்பட வேண்டும்.

**2. படித்தல் – 10 நிமிடங்கள்**

1. மாணவர்கள், ஆசிரியர் வழிகாட்டலுடன் பாடப்பகுதியைப் படித்தல்.
2. புரியாத மற்றும் புதிய சொற்களை அறிவியல் சார்ந்த கலைச் சொற்களை மாணவர்கள் அடிக்கோடிடல்.
3. அடிக்கோடிட்ட சொற்களுக்கு ஆசிரியர் பொருள் விளக்கம் தருதல்.

www.Padasalai.Net

மாணவர்களை தனித்து / இருவர் கொண்ட குழுக்களாக பிரித்து படிக்க வேண்டிய பாடப்பகுதியை படிக்க செய்ய வேண்டும். குழுவில் மாணவர்கள் படிக்கும்போது புரியாத, புதிய வார்த்தைகளை பென்சிலைப் பயன்படுத்தி அடிக்கோடிட்டு தங்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுத வேண்டும். (மாணவர்கள் குழுக்களில் அமர்ந்து வாசிப்பதையும் புதிய வார்த்தைகளை அடிக்கோடிடுதலையும் ஆசிரியர் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்).

புதிய வார்த்தைகளுக்கான விளக்கத்தினை சிறுகுழுவிலோ, பெரிய குழுவிலோ (வகுப்பறை), அகராதியை பயன்படுத்தியே அல்லது ஆசிரியர் உதவியுடனோ விளக்கத்தினை பெறலாம். புதிய வார்த்தை அடங்கிய வாக்கியத்தை (மாணவன்) வாச¨த்து காட்டுதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து ஆசிரியர் பாடப்பகுதியை வாச¨த்து புதிய வார்த்தைகளுக்கான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

**3. மனவரைபடம் வரைதல் மற்றும் வழங்குதல் – 15 நிமிடங்கள்**

1. மனவரைபடத்தினை மாணவர்கள் வரைதல். ( 5 நிமிடம்)
2. பாடக்கருத்துக்களின் அடிப்படையில் மாணவர்கள் தயாரித்த மனவரைபடத்தை வழங்குதல். (5 நிமிடம்) (ஒரு குழு மாணவர்கள் மட்டும் ஒரு வகுப்பில்

மனவரைபடத்தை விளக்குதல் போதுமானது. மற்ற மாணவர்களுக்கு அடுத்த வகுப்புகளில் சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கலாம்.

**3.** விடுபட்ட கருத்துக்களுடன் ஆசிரியர் மன வரைபடத்தை வழங்குதல். (5 நிமிடம்)

ஒவ்வொரு மாணவரையும் கொடுக்கப்பட்ட பாடப்பகுதியின் புரிதலுக்கேற்ப மனவரைபடம் வரையச் செய்தல் வேண்டும். (மனவரைபடத்தில் வண்ணங்களுக்கோ, வடிவங்களுக்கோ முக்கியம் கொடுக்காமல் அதன் கருத்துக்களுக்கு முக்கியம் கொடுக்க வேண்டும்).

**குறிப்பு**

6ம் வகுப்பு மாணவர்களுக்கு, முதல் பருவத்திற்கு மட்டும், ஆசிரியர் வழிகாட்டுதலுடன் கூடிய மன வரைபடம் (guided mind map) வரைதல் வேண்டும்.

7, 8 வகுப்பு மாணவர்கள் தாங்களாகவே மனவரைபடம் வரைய வேண்டும்.

மனவரைபடத்திற்காக மட்டுமே அதிக நேரம் ஒதுக்குவதை தவிர்த்தல் வேண்டும். (5 நிமிடம் போதுமானது)

சிறுகுழுவில் கலந்துரையாடியபின் மனவரைபடம் பெரிய குழுவில் வழங்குதல் வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் வழங்குதலில் பங்கேற்கும் வகையில் சுழற்சி முறையில் வாய்ப்பளிக்க வேண்டும். மனவரைபடத்தில் விடுபட்ட கருத்துகளை ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.

**குறிப்பு:**

90 நிமிட பாடவேளையாக இருப்பின் ‘அறிமுகம்’ முதல் ‘குறைதீர் கற்றல்’ வரை அனைத்து படி நிலைகளையும் தொடர்ச்சியாக செயல்படுத்த வேண்டும்.

1. 90 நிமிட பாடவேளையை இருபாட வேளைகளாகப் பிரித்தல்
2. முதல் 45 நிமிடங்களில் ‘அறிமுகம்’ முதல் ‘தொகுத்தல்’ வழங்குதல் படிநிலை வரை செயல்படுத்த வேண்டும்.
3. அடுத்த 45 நிமிடங்களில் ‘வலுவூட்டல்’ முதல் ‘குறைதீர் கற்றல்’ படிநிலைகள் வரை செயல்படுத்த வேண்டும்.
4. ஒவ்வொரு அலகின் முடிவிலோ அல்லது பாடமுடிவில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வினை FA(b) மதிப்பீடாக எடுத்துக் கொள்ளலாம்.

www.Padasalai.Net

**4. தொகுத்தல் (Summarization) (10 நிமிடங்கள்)**

முன்னர் குறிப்பிட்டுள்ள 7 முறைகளில் தொகுத்தலை செய்ய வேண்டும்.

1. தொகுத்தலை ஏதேனும் ஒரு முறையில் மற்றொரு மாணவர் குழு வழங்குதல்.
2. விடுபட்ட கருத்துகளுடன் ஆசிரியர் தொகுத்தளித்தல்.

பாடத்திற்கு கருத்திற்கு ஏற்ற விதத்தில், ஏதேனும் முறைகளில் தொகுத்தல் யுத்திகளை பயன்படுத்தி தொகுத்தளித்தல்.

90 நிமிட பாடவேளை எனில் தொகுத்தல் படிநிலையிலிருந்து தொடர்ச்சியாக கற்றல் படிநிலைகளில் ஈடுபடச் செய்தல்.

45 நிமிட பாடவேளை எனில் தொகுத்தல் தொடர்பணியாக கொடுக்கலாம்.

**5. வலுவூட்டல் (Reinforcement) (15 நிமிடங்கள்)**

1. செயல்பாடுகள் மூலம் பாடப்பொருளை பொருள்படும் வகையில் அறியச் செய்தல்.
2. பாடக்கருத்துகளை வாழ்வியல் சூழலில் தொடர்புபடுத்தி எளிய செயல்பாடுகள் மூலம் ஆசிரியர் விளக்குதல்.

வலுவூட்டல் செயல்களாக, பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளையும், பாடக்கருத்துடன் தொடர்புடைய புத்தகத்தில் இல்லாத செயல்பாடுகளையும் ஆசிரியர் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். (இவை FA(A))செயல்பாடுகளாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

**6. மதிப்பீடு (15 நிமிடங்கள்)**

1. எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளை ஆசிரியர் நடத்தி மதிப்பீடு செய்தல்.
2. ஆசிரியர், மாணவர் அடைவு நிலை / கற்றல் நிலையினைக் கருத்தில் கொண்டு CCE மதிப்பீட்டு முறைகளில் மதிப்பீடு செய்யலாம்.

எழுத்துத் தேர்வு மட்டுமன்றி வாய்மொழித் தேர்வுகளும் அவ்வப்போது ஆசிரியரால் நடத்தப்பட்டு மாணவர்கள் மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படலாம். பாடம் நடத்தி முடிந்தபின் வைக்கப்பட்டு FA(b)யாக பதிவு செய்துகொள்ளலாம். (ஆசிரியரின் விருப்பத்திற்கேற்ப)

**7. குறைதீர் கற்றல் (15 நிமிடங்கள்)**

மதிப்பீட்டின்போது கண்டறிந்த மாணவர்கள் நிலைக்கேற்ப ஆசிரியர் மீண்டும் சில எளிய உத்திகள் / செயல்பாடுகளைப் பயன்படுத்தி பாடப்பகுதியில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

www.Padasalai.Net

மதிப்பீட்டின்போது கண்டறிந்த மாணவர்களின் நிலைக்கேற்ப ஆசிரியர் மீண்டும் பாடப்பகுதியை விளக்கி தனிகவனம் செலுத்த வேண்டும்.

**8. எழுதுதல்**

நூலக புத்தகங்களைப் பயன்படுத்தியும் பாடத்தகவல்களைச் சேகரித்தும் பாடம் சார்ந்த எளிய ஒப்படைப்புகள் வீட்டில் / பள்ளி வேளையில் எழுதச் செய்தல்.

பாடப்புத்தகத்திலுள்ள வினாக்களுக்கான பதிலையும் வீட்டுப்பாடமாக எழுதலாம்.

**9. தொடர்பணி**

பாடக்கருத்துகளுக்கு பொருத்தமாக ஒரு பருவத்திற்கு ஒன்று (அ) இரண்டு செயல்திட்டங்களை கொடுக்க வேண்டும். ஆசிரியர் வழிகாட்டுதலுடன் தனியாகவோ சிறிய (அ) பெரிய குழுவிலோ செய்யப்பட வேண்டும்.